## நீர் வளச் சபை - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர் வளச் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் இருப்பு பெறுமதியிடல் கொள்கை முதல் வந்தது முதல் செல்லல் (FIFO) முறையாக இருந்த போதிலும், இரத்மலானை களஞ்சியத்தில் இருப்பு விநியோகிக்கும் போது அந்த முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | இருப்பு பெறுமதியிடல் முதல் வந்தது முதல் செல்லல் முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. விசேடமாக அடிக்கடி விநியோகிக்கப்படுகின்ற எரிபொருள், உராய்வு எண்ணை, பீவீசீ போன்ற நுகர்வுப் பொருட்களின் இருப்பு மீதியை மதிப்பீடு செய்யும் போது இவ்வாறான நிலை ஒன்று ஏற்பட்டிருந்தது. | இருப்பு பெறுமதி இடுவதற்கு சரியான கொள்கையொன்று பின்பற்றப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இரத்மலானைக் களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 564,057 தொகையான வயர்களின் இருப்பு மற்றும் ரூபா 104,208 தொகையான உராய்வு எண்ணெய் இருப்பு என்பன கணக்குகளில் காண்பிக்கப்படவில்லை. மேலும், உராய்வு எண்ணெய் மற்றும் கிறீஸ் என 10 விடயங்களின் பௌதீக மீதிக்கும் இருப்பு பேரேடுகளின் மீதிகளுக்குமிடையே ரூபா 135,447 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இருப்புக் கணிப்பீடு செய்யும் போது ஏற்பட்ட வழுக்கள் 2019 ஆம் ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பௌதீக மீதிக்கும் இருப்புப் பேரேடுகளின் மீதிக்கும் இடையிலான பேறுபாடு ஆண்டின் இறுதி இருப்பு மெய்மையாய்வின் போது கண்டறியப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு காணப்படுகின்ற நலிவுகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இருப்பு பெறுமதியிடல் சரியாக செய்யப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் கடன்பட்டோர் மீதி ரூபா 26,855,874 இனால் ரூபா 7,272,211 தொகை வருடமொன்றை விட பழைய கடன் மீதியாக இருந்ததுடன் ஒரு வருடத்தை விட பழைய கடன் மீதிகளில் ரூபா 737,044 தொகை 2019 யூன் 07 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படவில்லை. | ஒரு வருடத்தை விட காலங்கடந்த கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதியை அறவிடுதல் நாளதுவரையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நபர்கள் மற்றும் 156 நிறுவனங்களில் இருந்து பல்வேறு சேவைகளை நிறைவேற்றுவதற்காக கிடைத்த ரூபா 36,330,490 தொகையான சேவை முற்பணத்திலிருந்து ரூபா 17,674,325 | 2018.12.31 இல் உள்ளவாறு காணப்பட்ட சேவை முற்பண மீதியில் ஒரு வருடத்தை விஞ்சிய மீதி 2019.06.30 ஆந் திகதி வரையில் ரூபா | நிறைவேற்றுவதற்கு கையேற்கப்பட்ட சேவைகளை விரைவாக நிறைவேற்றி பெறப்பட்ட |

| | | |
|---|---|---|
| தொகை ஒரு வருட காலத்தை விஞ்சியிருந்ததுடன் அந்த ஒரு வருட காலத்தை விஞ்சிய மீதியில் ரூபா 9,247,612 தொகையான சேவை முற்பணத் தொகைக்காக உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சபை தவறியிருந்தது. | 9,247,612 வரை குறைவடைந்திருந்ததுடன் அந்த மீதியையும் விரைவாக தீர்த்து வைப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1964 இன் 29 ஆம் இலக்க நீர் வளச் சபை அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 42 ஆம் இலக்க திருத்தப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவு | i. திருத்தப்பட்ட அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் 18 பேர்களையுடைய ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 13 பேர்களையுடைய ஆலோசனைக் குழுவொன்று தாபிக்கப்பட்டிருந்தது | எதிர்கால குழுக் கூட்டத்தின் போது இது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கும் தற்போதைக்கு பொருந்தும் வகையில் அதிகாரச்சட்டத்தைத் திருத்துவதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | ii. அதிகாரச் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவிற்கு முரணாக சுற்றாடல் தாக்கம் ஆராய்ச்சி கற்கைக்காக ரூபா 148,662,259 தொகை செலவிடப் பட்டிருந்தது. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் தாக்கம் ஆராய்ச்சி கற்கை அறிக்கை உள்ளக திணைக்கள மதியுரையாளர் குழுவிற்கு அனுப்பப்பட்டு தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் IV ஆம் அத்தியாயத்தின் 3.2 ஆம் பிரிவு | அமைய அல்லது நாட் சம்பள ஊழியர் ஒருவரை ஆட்சேர்க்கும் போது உரிய பிரகாரம் அதிகாரத்தைப் பெற வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக இந்த ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருந்த போதிலும், இதுவரையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 316 மற்றும் 341 | சபையின் பாவனைக்கு என பெறப்பட்டிருந்த உபயோக இருப்பு புத்தகங்களின் 05 வகை நிதிப்பிரமாணம் 316 மற்றும் 341 இன் பிரகாரம் இரத்மலான களஞ்சியத்தில் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட வில்லை. | சபையின் பயன்பாட்டிற்காக பெறப்பட்டிருந்த உபயோகப் புத்தகங்களை பாதுகாப்பாக கஞ்சியப்படுத்துவதற்கும் அவற்றை விநியோகிக்கும் செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடிவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 மார்ச் 16 ஆந் திகதிய 2010/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | (i) விவசாய நடவடிக்கைகளுக்காக நிர்மாணிக்கப்படுகின்ற 4 மீற்றர் விட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட பயிர்ச் செய்கைக் கிணறுகளுக்காக மற்றும் வணிக ரீதியிலான கமநல செயற்பாடுகளுக்கான கைத்தொழில் தேவைகளுக்காக நிர்மாணிக்கப்படுகின்ற குழாய்க் கிணறுகளை நிர்மாணிப்பதற்காக நீர் வளச் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படவில்லை. | நிலக்கீழ் நீரை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற கைத்தொழில்கள், சபையில் பதிவு செய்துள்ள நீர் இயலளவைப் பரீட்சித்துக் கொள்வதற்கும், நீர் மானிகளை பொருத்துவதற்கும் பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் பதிவு செய்யும் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | குழாய்க் கிணறுகளை நிர்மாணிப்பதற்கு முன் உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் வேலைகளை ஒழுங்குபடுத்தி முறையாகவும் வினைத்திறனாகவும் செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (ii) குழாய்க் கிணறுகளை நிர்மாணிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற சகல நிறுவனங்களும் நீர் வளச் சபையில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு பதிவு செய்யப் பட்டிருக்கவில்லை. | குழாய்க் கிணறுகள் நிர்மாணித்தலில் ஈடுபடுகின்ற நிறுவனங்களைப் பதிவு செய்வதற்காக செய்திப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது 190 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 198 துளையிடும் இயந்திரங்கள் துளையிடல் செயற்பாடுகளுக்காக பொருத்தமானது என இனங்காணப் பட்டிருந்தது. | பதிவு செய்தல் செயற்பாடுகளை முறைமைப் படுத்தவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (iii) வணிக ரீதியான விவசாயக் கைத்தொழில்களுக்காக அல்லது வேலைகளுக்காக மாதத்திற்கு 30,000 லீற்றர் நிலக்கீழ் நீரைப் பெற்றுக் கொள்ளும் சகல செயற் திட்டங்களுக்காகவும் உரிய நீர் பாய்ச்சல் தொடர்பான நிலைமை அறிக்கை சபையிலிருந்து விநியோகிக்கப்பட வில்லை. | சபையில் பதிவு செய்யுமாறு பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் இது வரையில் 294 நிறுவனங்கள் பதிவு செய்துள்ளதுடன் நீர் இயலளவை பரீட்சித்து நீர்மானி பொருத்தியதுடன், நீர் பாய்ச்சல் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாண நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட நிலையில் நிறைவேற்றும் போது தற்போது காணப்படுகின்ற சட்டரீதியான ஏற்பாடு போதியளவில் இல்லாமையினால் அதிகாரச்சட்டத்தை திருத்துவதற்கு தற்போது கவனம் செலுத்தப்படுகின்றது. | நீர் நிலைமை அறிக்கை விநியோகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் முறைமைப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | 2010 திசெம்பர் 10 ஆந் திகதிய 01/2010 ஆம் இலக்க வியாபார, சுங்கவரி மற்றும் முதலீட்டுக் கொள்கை | சுற்றறிக்கைக்கு முரணாக சேவைக் காலம் 12 வருடங்களைப் பூர்த்தி செய்யாத உள்ளகக் கணக்காய்வாளருக்காக வரிச்சலுகை மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் | உரிய உத்தியோகத்தரால் வழங்கப்பட்டுள்ள ஆவணங்களின் பிரகாரம் 12 வருடங்கள் பதவிநிலைத் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கை | வழங்கப்பட்டிருந்தது. | தரமொன்றில் சேவையாற்றி இருந்தமையால் வரிச் சலுகை மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |
| (ஊ) | 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை | தற்காலிக, அமைய (நாளாந்த) நாட்கூலி, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஊழியர்களைச் சேர்க்கும் போது சுற்றறிக்கைக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தற்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2012 சனவரி 18 ஆந் திகதிய DMS/G2/15/04 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | 2012 சனவரி 18 ஆந் திகதிய DMS/G2/15/04 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கைக்கு முரணாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 16 உத்தியோகத்தர்கள் அதிகரிக்கப்பட்டிருந்தனர். | பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தற்போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ள பதவியணியினரை மாத்திரம் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 33,658,000 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,943,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 26,715,000 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 12,250,000 இனால் அதிகரித்து ஆண்டின் செலவினம் ரூபா 14,465,000 இனால் குறைவடைந்தமை இந்த முன்னேறத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் முக்கிய பகுப்பாய்வுகள்

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 7,868,000 இனால் அதிகரித்திருந்ததுடன் அது சதவீதமாக 77 சதவீத பெறுமதியைக் கொண்டிருந்தது. சொத்துக்களை அகற்றும் நட்டம் (Losses on Disposals), அறவிட முடியாக் கடன் (Bad Debts), தண்டப்பணம் மற்றும் மிகைக் கட்டணம் (Fines & Surcharges) அதிகரித்திருந்தமை அதற்கு காரணமாக இருந்தன.

## 2.3 பகுப்பாய்வு விகிதம்

| விகித வகை | 2018 | 2017 |
|---|---|---|
| திரவ விகிதம் | | |
| நடைமுறை விகிதம் | 6.25:1 | 2.79:1 |
| வரைவு விகிதம் | 3.16:1 | 0.92:1 |

சபையினால் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளின் தன்மையின் பிரகாரம் காணப்பட வேண்டிய பொருத்தமான தொழிற்படு மூலதன தேவை தொடர்பாக மதிப்பீட்டைச் செய்து பொருத்தமான தொழிற்படு மூலதன முகாமைத்துவ முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நடைமுறைப் பொறுப்பு 1 ஐ தீர்ப்பதற்கான நடைமுறைப் பொறுப்புக்கள் 6.25 பேணப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 218 மில்லியன் தொகை பகுப்பாய்வு செய்யப்படாமல் நடைமுறைச் சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றல் தொடர்பான அறிக்கையை சபை தயாரித்திருந்த போதிலும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் உரிய நிதிசார் செயலாற்றல் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகளுக்குரிய நிதிசார் செயலாற்றல்களை தனித்தனியாகக் கணிப்பிடல், சில செயற்பாடுகள் ஒன்றுக்கொன்று இணையானதாக மேற்கொள்ளப்படுவதனால் வசதியீனமாக இருந்தது. இது தொடர்பான மேலும் கவனம் செலுத்தி முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிதிசார் செயலாற்றல் காண்பிக்கப்பட வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நீர் வளச் சபை பயன்படுத்துகின்ற பிரதான அலுவலகக் காணி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய இரத்மலான இயந்திர வேலைத்தளம் அமைந்துள்ள காணி மற்றும் அரசாங்கத்திற்குரிய அனுராதபுரம் அளுத்நுவரயில் அமைந்துள்ள சுற்றுலா விடுதிக்குரிய காணி என்பவற்றை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படாதிருந்ததுடன் அவற்றில் அமைந்துள்ள கட்டிடங்களைப் புதுப்பிப்பதற்கு ரூபா 20.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | அரசாங்கத்திற்குரிய காணியின் அரைப் பகுதியில் நடாத்திச் செல்லப்படுகின்ற சபையின் அலுவலகக் கட்டிடத்தை புதுப்பிப்பதற்கு தேவையான விடத்து அதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டி ஏற்படுகின்றது. அக்காணியை சபையின் பெயரில் கையேற்பதற்கு முயற்சி எடுத்திருந்த போதிலும், அதற்கான செயற்பாடுகளைச் செய்தல் ஒழுங்கற்றிருந்தது. விசேடமாக இரத்மலான பிரதான வேலைத்தளத் தொகுதியின் கூரை 100 வருடங்கள் அளவிலான பழையானதாகவும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய நிலையிலும் காணப்பட்டதுடன் அந்தக் களஞ்சியத்திலிருந்து சராசரியாக ரூபா 150 மில்லியனுக்கு மேற்பட்ட இருப்பைப் பேணிச் செல்வதற்கும் ஏனைய இயந்திர உபகரங்களின் பாதுகாப்பிற்காவும் மழைப் பாதுகாப்பு செயற்திட்டத்தின் கீழ் இந்த கூரையை பாதுகாப்பதற்காக மூலதனச் செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. | சபை பயன்படுத்துகின்ற வெளி நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) மோனறாகல் மாகாண அலுவலக வளவில் பெறுமதி தீர்மானிக்க முடியாத நீர்த்தாங்கி மற்றும் 21 பிளாஸ்ரிக் நீர்த்தாங்கிகள் என்பன காணப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களிலும் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை | வறட்சி நிலை காணப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது நீர் வழங்கல் நடைவடிக்கைகளுக்காக பயன்படுத்துகின்ற இந்த நீர்த் தாங்கிகளை பொருட் பதிவேடுகளில் உள்ளடக்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்து புத்தகங்களுக்கு எடுப்பதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சகல சொத்துக்களும் இனங்காணப்பட்டு பெறுமதிகளை கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2017 மே மாதம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 8,941,250 தொகையான 50 நீர்ப் பம்பிகள் 2019 யூலை வரையில் 06 மாத்திரம் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தது. பயன்படுத்தப்படாத 44 நீரப் பம்பிகளின் உத்தரவாத காலமான 02 வருடங்களை விஞ்சி இருந்தது. | திடீர் அனர்த்தம் மற்றும் வெள்ள நீர் நிலைமையின் போது பயன்பாட்டிற்கு எடுக்கும் வகையில் இந்த நீர்ப் பம்பிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வாறான சந்தர்ப்பத்தின் போது பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக அவை தயார்படுத்தப்பட்டிருந்தது. | தேவையினை இனங்கண்டு அதன் பிரகாரம் கொள்வனவு மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,638,900 தொகையான 11 மின் உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் ரூபா 2,250,000 தொகையான 03 மின் உற்பத்தி இயந்திரங்கள் என்பன 2019 யூலை வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | திடீர் அனர்த்தம் மற்றும் வெள்ள நீர் நிலைமையின் போது பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக மின் உற்பத்தி இயந்திரத்தை வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவையினை இனங்கண்டு அதன் பிரகாரம் கொள்வனவு செய்ய வேண்டி இருந்ததுடன் அவற்றைப் பயன்பாட்டிற்கு எடுப்பதாயின் மாத்திரம் கொள்வனவு செய்ய வேண்டும். |
| (உ) | 2009 ஆம் ஆண்டின் போது சமூக சேவைகள் திணைக்களத்தில் இருந்து கிடைத்த 50 நீர்ப் பம்பிகள் பாவனைக்கு எடுக்கப்படாமலும் இந்த இயந்திரங்கள் செயற்படு நிலை அல்லது செயற்பாடற்ற நிலை தொடர்பாக பரீட்சிக்கப்படாமலும் மற்றும் களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது. | சமூக சேவைகள் திணைக்களத்தில் இருந்து கிடைத்த நீரப் பம்பிகள் பல்வேறு வெள்ள நீர் நிலைமையின் போது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் செயற்படு நிலைமையை பரீட்சித்து பயன்பாட்டிற்கு எடுக்க முடியாது போனால் அவற்றை விற்றுத் தீர்ப்பதற்கு இந்த ஆண்டின் போது கனவம் செலுத்தப்பட்டுள்ளது. | பயன்பாட்டிற்கு எடுத்த அல்லது தேவையொன்று இல்லாது இருக்குமாயின் மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாது இருக்குமாயின் ஏனைய செயல் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | ரிக் இலக்கம் 03 என்ற துளையிடும் இயந்திரத்தில் கடமைகளை நிறைவேற்றிய உத்தியோகத்தர் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி ஓய்வுபெற்றுச் சென்றதன் பின்னர் | சபையின் துளையிடும் இயந்திரத்தை செயற்படுத்துவதற்காக பயிற்சிபெற்ற துளையிடல் உத்தியோகத்தர்கள் தற்போது சபையில் இருப்பதுடன் இலக்கம் 03 என்ற துளையிடும் இயந்திரத்தில் காணப்படுகின்ற பழுதுபார்த்தல் | பழுதுபார்த்தலை மேற்கொண்டு பாவனைக்கு எடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பயிற்சி உத்தியோகத்தர் இல்லாமையின் காரணமாக அந்த இயந்திரம் மற்றும் அதற்குரிய சகல உபகரணங்களும் இரத்மலான இயந்திர வேலைத்தளத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | செயற்பாடுகளுக்காக இரத்மலான வேலைத்தளத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இரத்மலான பிரதான களஞ்சியம் மற்றும் இயந்திர வேலைத்தளம் என்பவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 89 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 48 ஆகக் காணப்பட்டது. இயந்திர பொறியியலாளரை உள்ளடக்கிய 41 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. ஊழியர் எண்ணிக்கையில் 28 பேர்களுக்காக கடமைப்பட்டியல் வழங்கப் பட்டிருக்கவில்லை. | இரத்மலானை பிரதான களஞ்சியம் மற்றும் இயந்திர வேலைத்தளத்திற்கு நியமிக்கப்பட வேண்டிய ஊழியர் எண்ணிக்கையில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்போது திறைசேரி அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளமையால் அதன் பிரகாரம் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு விரைவாக எதிர்பார்க்கப்படுகின்றது. கடமைப் பட்டியல் விநியோகிப்பதற்கு தேவையான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் கடமைப் பட்டியல்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை 119 ஆகும். தேவையான பதவியணியினர்களைச் சேர்ப்பது தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டிருக்கவில்லை. | சபையில் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களில் 106 பதவிகளை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது. | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019.04.23 ஆந் திகதி தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் உள்ளவாறு கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 05 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சிலும் பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 05 சதவீதம் முதல் 175 சதவீதம் வரையிலான வீச்சிலும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களின் உள்ளபடியான பெறுமதிகளுக்குமிடையே ஏற்படுகின்ற முரண்களை இயலுமானவரை குறைப்பதற்கு எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படும். | பாதீட்டை சாத்தியமானதாக தயாரித்து பாதீட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக கவனத்தில் கொண்டு நீர்வளச் சபையினால் தமது விடயப் பரப்பின் பிரகாரம் அடையப்பட வேண்டிய | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க நீர் வளச் சபையினால் அடையப்பட்ட நோக்கங்கள் பிரதானமாக நிலக்கீழ் நீர் வளத்தை நாடு முழுவதும் பரவலாக்கி அபிவிருத்தி செய்தல், பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்தை | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அது தொடர்பான இலக்குகள், தரவு இலக்குகளை அடைய வேண்டிய கட்டங்களை |

| | | | |
|---|---|---|---|
| | நிலைபேறான அபிவிருத்தி நோக்கமொன்றான சகலருக்கும் நீர் மற்றும் சுகாதார வசதிகளை பெற்றுக்கொள்ளல், அவற்றின் நிலைபேறான முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் அந்த விடயப்பரப்பிற்கு கொண்டுவரப்படுகின்ற ஏனைய நோக்கங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான இலக்குகள், அடிப்படைத் தரவுகள், இலக்குகளை அடைய வேண்டிய கட்டங்களைப் போன்று முன்னேற்றங்களை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்தப் பணிகளை நிர்ணயிப்பதற்காக தேவையான வருடாந்த கட்டங்களும் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | உறுதிப்படுத்துதல் அடிப்படையாக இருந்ததுடன் கடந்த ஆண்டில் சபையின் அனுபவம் மற்றும் அது தொடர்பான இலக்குகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட தரவுகள் மற்றும் முன்னேற்றங்களை அளவீடு செய்வதற்கிடையே இந்த இலக்குகளை போன்று, பிரதான முன்னேற்ற குறிகாட்டிகளும் (KPI) சபையின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி அதன் பிரகாரம் உரிய செயற்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த செயற்பாடுகளை மேலும் முறைமைப்படுத்துவதற்கு கணக்காய்வின் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதற்காக தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களை பூர்த்தி செய்வதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அளவீடு செய்யும் குறிகாட்டிகளை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிலைபேறாக அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக நீர்வளச் சபையின் பணிப்பொறுப்பு தொடர்பாக அக்கறையைக் காண்பிக்கின்ற தரப்பினராக சுற்றாடல் அமைச்சு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, புவிச் சரிதவியல் மற்றும் அகழ்வுப் பணியகம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் நீர்ப்பாசன திணைக்களங்கள் போன்ற தரப்பினர் இனங்காணப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்திற்குரிய இலக்குகளைத் | சபையின் பணிப்பொறுப்பு மற்றும் தொடர்பான சுற்றாடல் அமைச்சு, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, புவிச்சரிதவியல் மற்றும் கனிப்பொருள் அகழ்வு பணியகம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் ஏனைய தரப்பினருடன் சபை நிரந்தரமாக செயற்படுவதுடன் சபையின் பணிப்பொறுப்புக்களைத் திட்டமிடும் போது விசேடமாக நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மூலம் வழங்கப்படுகின்ற கருதுகோள்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும், நீர்வளச் சபை | நிலைபேறான அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு உள்நுளைவினை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கும் போது பங்குபற்றல் நுழைவினை வெளிப்படுத்தாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | அதிகாரச்சட்டத்திற்கு இணங்க தேவையான அரச நிறுவனங்களைத் தொடர்புபடுத்தும் வகையில் உத்தேச உள்ளக திணைக்கள மதியுரைக் குழு 2017 ஆம் ஆண்டு முதல் கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. | |
| (இ) | எந்தவொரு பணிகளினதும் சரியான செயலாற்றலை அளவிடுவதற்காக சரியான தரவு அடிப்படையொன்று காணப்படுதல் அவசியமாக இருந்த போதிலும், நிறுவனத்தால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அடையப்பட்டமையை அளவீடு செய்வதற்கான சரியான தரவு அடிப்படையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்கான நிதிஏற்பாடு போதியளவில் இன்மை, பௌதீக வசதிகள் போதியளவில் இன்மை, மற்றும் பயிற்சிபெற்ற ஊழியர்கள் இன்மை போன்ற விடயங்கள் காரணமாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தி தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக நீண்டகால திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலைபேறான அபிவிருத்திக்காக அடைந்து கொள்வதற்குரிய தரவுகளை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் வேண்டும். |